செ.வெ.எண் : 16/ஏப்ரல் நாள்:13.04.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஏர்வாடி அரசு மனநல காப்பகம் மற்றும் மறுவாழ்வு இல்லத்தில் சிகிச்சை பெறுபவர்களுக்கு ஆவின் நிறுவன பால் உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி அரசு மனநல காப்பகம் மற்றும் மறுவாழ்வு இல்லத்தில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.04.2020) நேரில் சென்று ஆவின் நிறுவன பால் உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி, கொரோனா வைரஸ் தடுப்பு தொடர்பான பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் இருந்து இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 4,777 நபர்கள் திரும்பியுள்ளனர். அவர்களில் தற்போது 554 நபர்கள் அவரவர் குடும்பத்தாருடன் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் அனைத்து முக்கிய பகுதிகளிலும் தீயணைப்புத் துறை மற்றும் அந்தந்த உள்ளாட்சித் துறை ஒருங்கிணைந்து கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இராமநாதபுரம் மற்றும் பரமக்குடி அரசு மருத்துவமனைகள், பார்த்திபனூர், தேவிப்பட்டிணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொரோனா சிகிச்சைக்காக 440 படுக்கை வசதிகளுடன் தனிமைப்படுத்தப்பட்ட சிகிச்சைப் பிரிவு தயார் நிலையில் உள்ளது.

பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அனைத்தும் தடையில்லாமல் கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் விற்பனை தொடர்பாக மொத்தம் 85 தனியார் மொத்த விற்பனைக் கடைகளும், 4,856 சில்லறை விற்பனைக் கடைகளும் உள்ளன. இக்கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்திட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சுமார் 75 மெட்ரிக் டன் அளவில் காய்கறிகளும், 45 மெட்ரிக் டன் அளவில் பழ வகைகளும் மாவட்டத்திற்கு விற்பனைக்காக வரப்பெறுகின்றன.

மாவட்டத்தில் மொத்தம் 4,583 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,500/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளிகளுக்கு 2 மாதத்திற்கான உதவித் தொகை தலா ரூ.3,000/- வீதம் மொத்தம் ரூ.1.37 கோடி சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள 6 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான காப்பகம் மற்றும் மறுவாழ்வு காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 191 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,000/- உதவித்தொகை மற்றும் அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுப்பொருட்கள், மருத்துவ உதவிகள், ஆவின் நிறுவனத்தின் பால் உணவுப் பொருட்கள் ஆகியவை நேரிடையாக வழங்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏர்வாடி தர்ஹா பகுதியில் தீயணைப்பு துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, இராமநாதபுரம் கேணிக்கரை பகுதியில் உள்ள தனியர் மரச்செக்கு எண்ணெய் நிறுவனத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களில் ஒன்றான எண்ணெய் உற்பத்தி குறித்து பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின்போது, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.எஸ்.எஸ்.சேக் அப்துல்லா உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**